# 'ஏற்றுமதி தயார்நிலை குறியீடு 2022': தமிழகம் முதலிடம்

**புது தில்லி, ஜூலை 17:** நீதி ஆயோக் திங்கள்கிழமை வெளியிட்ட 'ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு 2022'-இல் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. முந்தைய 2 ஆண்டுகளாக முதலிடம் பெற்ற குஜராத், 4-ஆவது இடத்துக்குப் பின்தங்கியது.

மாநிலங்களின் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், செயல்திறன் ஆகியவற்றை மதிப்பிடும் வகையில் ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டை நீதி ஆயோக் அமைப்பு வெளியிட்டு வருகிறது.

அந்தக் குறியீட்டில் 80.89 மதிப்பெண்களுடன் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து, மகாராஷ்டிரம், கர்நாடகம், குஜராத், ஆந்திரம், ஒடிஸா, மேற்கு வங்கம், கேரளம் உள்ளிட்ட மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன.

மலைப் பிரதேச மாநிலங்களுக்கான பட்டியலில் ஹிமாசல பிரதேசம் (59.13) முதலிடம் வகிக்கிறது. அதைத் தொடர்ந்து மணிப்பூர், திரிபுரா, சிக்கிம், நாகாலாந்து, மேகாலயம், அருணாச்சல பிரதேசம், மிசோரம் உள்ளிட்ட மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன.

நிலத்தால் சூழப்பட்ட மாநிலங்களில் ஹரியாணா (63.65) முதலிடம் பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து தெலங்கானா, உத்தர பிரதேசம், பஞ்சாப், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன.

சிறிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கான பட்டியலில் கோவா 51.58 மதிப்பெண்களுடன் முன்னணியில் உள்ளது. அதைத் தொடர்ந்து ஜம்மு-காஷ்மீர், தில்லி, அந்தமான்-நிக்கோபார், லடாக் ஆகியவை உள்ளன.

**நான்கு அளவீடுகள்:** ஏற்றுமதிக்குச் சாதகமான சூழலை உருவாக்குதல், ஒழுங்காற்று அமைப்பை எளிமைப்படுத்துதல், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் மாநிலங்களுக்கு இடையே போட்டிச் சூழலை ஏற்படுத்துவதை இந்தக் குறியீடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாநில அரசின் ஏற்றுமதிக்கான கொள்கை, அங்கு நிலவும் வர்த்தகச் சூழல், ஏற்றுமதிக்கான சூழல், செயல்திறன் ஆகிய அளவீடுகளின் அடிப்படையில் இந்தக் குறியீடு வெளியிடப்படுகிறது.

இது தொடர்பாக நீதி ஆயோக் தலைமைச் செயல் அலுவலர் (சிஇஓ) பி.வி.ஆர். சுப்பிரமணியம் கூறுகையில், 'ஏற்றுமதிக்கான ஒட்டுமொத்த சூழலும் மாநிலங்களிலே உருவாக்கப்படுகிறது. ஆகையால், நாட்டின் ஏற்றுமதியில் மாநிலங்கள் அடிப்படை உறுப்பினர்களாக உள்ளனர்.

ஏற்றுமதி குறித்த விழிப்புணர்வை விரிவுபடுத்த இந்தக் குறியீடு உதவியாக இருக்கும். நாட்டில் ஏற்றுமதிக்கான விரிவான அடித்தளத்தைக் கட்டமைப்பது அவசியம்' என்றார்.

**மாவட்டங்களில் ஜாம்நகர் முதலிடம்:** ஏற்றுமதி செய்யும் மாவட்டங்களில் குஜராத்தின் ஜாம்நகர் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து சூரத், மும்பை புறநகர், மும்பை, புணே, பரூச், காஞ்சிபுரம், அகமதாபாத், கௌதம்புத் நகர், பெங்களூரு புறநகர் உள்ளிட்ட மாவட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள முதல் 100 மாவட்டங்கள் நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் 87 சதவீதம் பங்களிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY

# உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த சர்வதேச முயற்சிகள்

## மத்திய நிதியமைச்சர் வலியுறுத்தல்

**காந்திநகர், ஜூலை 17:** உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த சர்வதேச முயற்சிகள் அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் தலைநகர் காந்திநகரில் ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டம் 2 நாள்கள் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை பேசியதாவது:

உலகப் பொருளாதார வளர்ச்சி நீண்ட கால சராசரிக்கு குறைவாகவும், சீரற்றதாகவும் உள்ளது.

தற்போதைய சவாலான கால கட்டத்தைக் கடந்து செல்ல ஒருங்கிணைந்த சர்வதேச முயற்சிகள் அவசியம்.

இந்தச் சூழலில், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பின்மை, பருவநிலை மாற்றம் தொடர்பான பேரியல் பொருளாதார சவால்களை எதிர்கொள்வது குறித்து ஜி20 கூட்டமைப்பின் பணிக்குழு ஆராய்ந்தது.



குஜராத் மாநிலம் காந்திநகரில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை திங்கள்கிழமை சந்தித்துப் பேசிய அமெரிக்க நிதி அமைச்சர் ஜேனட் யெல்லன்.

இந்த பிரச்னைகளில் இருந்து கிடைத்துள்ள கொள்கை ரீதியான பாடங்கள், மேம்பட்ட சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பின் அவசியத்தை தெளிவாக எடுத்துரைத்துள்ளன என்றார்.

# போதைப்பொருள் இல்லாத பாதுகாப்பான நாடே இலக்கு

**புது தில்லி, ஜூலை 17:** 'நாட்டை போதைப்பொருள் இல்லாத பாதுகாப்பானதாக மாற்றுவதே மத்திய அரசின் இலக்கு. இதற்கு அனைத்து மாநில முதல்வர்களும் துணைநிலை ஆளுநர்களும் முழு அளவிலான ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்' என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (என்சிபி) மற்றும் பாதுகாப்புப் படையினரால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.2,381 கோடி மதிப்பிலான 1.40 லட்சம் கிலோ போதைப் பொருள்கள் மத்திய பிரதேச மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் திங்கள்கிழமை அழிக்கப்பட்டன.

தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற 'போதைப் பொருள்கள் கடத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பு' என்ற தலைப்பிலான மாநாட்டில் பங்கேற்ற அமித் ஷா, பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற இந்த போதைப் பொருள்கள் அழிப்பு நடவடிக்கையை காணொலி வழியில் பார்வையிட்டார். அப்போது அவர் பேசியதாவது:

கடந்த ஓராண்டில் ரூ.12,000 கோடி மதிப்பிலான 10 லட்சம் கிலோ போதைப் பொருள்கள் அழிக்கப்பட்டுள்ளன. இது மிகுந்த குறிப்பிடத்தக்க சாதனை. இந்த மிகப் பெரிய இலக்கை எட்ட உதவியை அனைத்து மக்களுக்கும் பாராட்டுகள்.

அமித் ஷா



நாட்டில் எந்தவொரு இளைஞரும் போதைப் பொருள்களுக்கு அடிமையாகாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும், போதைப் பொருள்கள் இல்லாத பாதுகாப்பான நாடாக இந்தியாவை மாற்றுவதுமே மத்திய அரசின் இலக்கு.

மத்திய,மாநில அரசுகள் மற்றும் அனைத்து பாதுகாப்பு அமைப்புகளும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்து ஒத்துழைப்பை அளிக்கின்றபோதுதான், இந்த இலக்கை எட்ட முடியும். அரசுகளின் ஒத்துழைப்புடன் கூடிய முழுமையான அணுகுமுறை, ஒருங்கிணைப்பு மற்றும் இணைந்து செயல்படுவதன் மூலம் மட்டுமே போதைப் பொருள்களுக்கு எதிரன முயற்சியில் வெற்றிபெற முடியும்.

மேலும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கான நிதியுதவி சங்கிலியை உடைக்காத வரை, நமது போதைப்பொருள்களுக்கு எதிரான நடவடிக்கை நிறைவடையாது. தொடர்ச்சியான கண்காணிப்பு இதற்கு அவசியம். அதில் சிறிதளவு தளர்ச்சி ஏற்பட்டாலும் ஒட்டுமொத்த இயக்கமும் நாசமாகிவிடும்.

எனவே, சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் மீது சொத்துகள் பறிமுதல், பொது சமூகத்தில் அவமதிக்கப்படுத்துதல் உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும். இதில் எந்தவித இரக்கமும் காட்டக்கூடாது என்றார்.

EVA STALIN IAS AC

# 105 பழங்கால கலைப் பொருள்களை இந்தியாவிடம் ஒப்படைத்தது அமெரிக்கா

**நியூயார்க், ஜூலை 17:** கி.பி. 2-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்த 105 பழங்கால கலைப் பொருள்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டன.

நியூயார்க்கில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் தரண்ஜித் சிங் சாந்து முன்னிலையில் அவை இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பாக தரண்ஜித் சிங் கூறியதாவது: இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் பழங்கால கலைப்பொருள்கள் கலையை மட்டுமல்லாமல், நமது பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் பிரதிபலிக்கின்றன. இவை விரைவில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். கலாசார பொருகள்களைச் சட்டவிரோதமாக விற்பனை செய்வதைத் தடுக்கும் வகையில் கலாசார சொத்துக்கான ஒப்பந்தத்தின்படி இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பணியாற்றும்' என அவர் கூறினார்.

**இந்திய-அமெரிக்க வர்த்தக பிரச்னைகளுக்குத் தீர்வு:** பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணத்தின்போது மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில், இந்தியா-அமெரிக்கா இடையேயான 6 வர்த்தக பிரச்னைகள் தொடர்பாக உலக வர்த்தக அமைப்பில் நிலுவையில் உள்ள புகார்களுக்கு பரஸ்பர தீர்வு காணப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 2019-இல் இந்திய எஃகு, அலுமினியம் மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்ததையடுத்து, 28 அமெரிக்க பொருள்கள் மீது கூடுதல் சுங்க வரியை இந்தியா விதித்தது.

இதையடுத்து, கூடுதல் சுங்க வரி விதிப்பு உள்பட இந்தியாவுக்கு எதிராக 3 புகார்களை உலக வர்த்தக அமைப்பில் அமெரிக்கா அளித்திருந்தது. அமெரிக்காவுக்கு எதிராக இந்தியா சார்பிலும் 3 புகார்கள் அளிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், இந்த பிரச்னைகளுக்கு இரு நாட்டு தலைவர்களின் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தீர்வு காணப்பட்டது.

இதன்படி, 28 அமெரிக்க பொருள்கள் மீதான கூடுதல் வரியை இந்தியா ரத்து செய்ய உள்ளதாக அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

EVA STALIN ACADEMY

# உலக துப்பாக்கி சுடுதல்: இந்திய இணைக்கு தங்கம்

**சாங்வோன், ஜூலை 17:** தென் கொரியாவில் நடைபெறும் ஜூனியர் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அபினவ் ஷா/கௌதமி பனோத் கூட்டணி தங்கப் பதக்கம் வென்றது.

10 மீட்டர் ஏர் ரைஃபிள் கலப்பு அணிகள் பிரிவில் அபினவ்/கௌதமி கூட்டணி 17-13 என்ற புள்ளிகள் கணக்கில் பிரான்ஸின் ஓசியேன் முல்லர்/ரோமெய்ன் அவ்ப்ரெர் இணையை சாய்த்து முதலிடம் பிடித்தது. 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் அபினவ் சௌதரி/சைனியம் இணை வெண்கலப் பதக்கச் சுற்றில் 17-11 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் கிம் ஜுரி/கிம் காங்யுன் ஜோடியை சாய்த்து பதக்கத்தை உறுதி செய்தனர்.


சைனியம்/அபினவ்

இப்போட்டியில் இந்தியா தற்போது, 3 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் என 6 பதக்கங்களுடன் 2-ஆவது இடத்தில் உள்ளது.

EVA STALIN IAS ACADEMY



# கிரீமியா பாலத்தில் மீண்டும் குண்டுவெடிப்பு: 2 பேர் பலி

**மாஸ்கோ, ஜூலை 17:** ரஷியாவையும், கிரீமியாவையும் இணைக்கும் ஒரே பாலத்தில் திங்கள்கிழமை மீண்டும் குண்டுவெடிப்பு நடத்தப்பட்டது.

இதில், 2 பேர் உயிரிழந்தனர்; ஒரு சிறுமி காயமடைந்தார்.

இது குறித்து ரஷிய அதிகாரிகள் கூறியதாவது.

ரஷியாவையும்,கிரீமியாவையும்இணைக்கும் கெர்ச் பாலத்தில் திங்கள்கிழமை அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், க்யூனிக் (40) என்பவரும், அவரது மனைவி நடாலியாவும் (36) உயிரிழந்தனர். அவர்களது 14 வயது மகளுக்கு நெஞ்சிலும், மூளையிலும் காயம் ஏற்பட்டுள்ளது. விடுமுறையைக் கழிப்பதற்காக கிரீமியாவை நோக்கி அவர்கள் சென்றபோது இந்த குண்டுவீச்சில் சிக்கினர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சாலைப் பாலத்தில் போக்குவரத்து முடங்கியது. மேலும், அந்தப் பாலத்தையொட்டி அமைந்துள்ள ரயில் பாலத்தில் 6 மணி நேரத்துக்கு போக்குவரத்து நிறுத்திவைக்கப்பட்டது என்று அதிகாரிகள் கூறினர்.

உக்ரைனின் இரு ஆளில்லா விமானங்கள் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ரஷியாவின் தேசிய பயங்கரவாதத் தடுப்புக் குழு குற்றஞ்சாட்டியது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இணையதளத்தில் வெளியான விடியோவில், குண்டுவெடிப்பின் சிதறல்களை ராணுவ சீருடை அணிந்தவர்கள் சேகரிக்கும் காட்சியும், தாக்குதலில் சேதமடைந்த ஒரு காரின் கதவுகள் திறந்திருக்கும் காட்சியும் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், தாக்குதலில் அந்த பாலத்தின் ஒரு பகுதி சரிந்திருப்பதும் அந்த விடியோவில் பதிவாகியுள்ளது.

பாலத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும், அந்தப் பணி நிறைவடைந்த பிறகே எவ்வளவு காலத்தில் பாலத்தை சீர்செய்ய முடியும் என்பதைத் தீர்மானிக்க முடியும் என்று ரஷிய துணைப் பிரதமர் மாரட் கூஸ்னிலின் கூறினார்.

ஏற்கெனவே, கெர்ச் பாலத்தில் லாரி குண்டு மூலம் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 5 பேர் உயிரிழந்தனர்.

அந்தத் தாக்குதலையும் உக்ரைன்தான் நடத்தியதாகக் குற்றம் சாட்டிய ரஷியா, அதற்கு பதிலடியாக அந்த நாடு முழுவதும் தீவிர ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குலை நடத்தியது.

**பின்னணி:** கடந்த 2014-ஆம் ஆண்டில் உக்ரைனை ஆட்சி செலுத்தி வந்த அதிபர் விக்டர் யானுகோவிச்சுக்கு எதிராக மேற்கத்திய ஆதரவாளர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து, அவரது ஆட்சி கவிழ்ந்தது.

அதனைத் தொடர்ந்து, கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பிராந்தியங்களில் ரஷிய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் அரசுப் படையினருக்கு எதிராக சண்டையிட்டு கணிசமான பகுதிகளைக் கைப்பற்றினர். அப்போது ரஷியாவும் உக்ரைனின் தெற்குப் பகுதி தீபகற்பமான கிரீமியா பகுதி மீது படையெடுத்து தங்களுடன் இணைத்துக்கொண்டது. இதற்கு மேற்கத்திய நாடுகள் கடும் ஆட்சேபம் தெரிவித்து வருகின்றன.

எனினும் அதனைப் பொருள்படுத்தாத ரஷியா, கிரீமியாவுக்கும் தங்கள் நாட்டுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவதற்காக ரயில் பாதை மற்றும் சாலை இணைந்த பாலத்தை கட்டியது.

சுமார் 19 கி.மீ. நீளமுடைய அந்தப் பாலத்தை ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் கடந்த 2018-ஆம் ஆண்டு திறந்துவைத்தார்.

கிரீமியாவை தங்கள் நாட்டின் ஒரு பகுதியாக உக்ரைன் அங்கீகரிக்க வேண்டும் என்று ரஷியா வலியுறுத்தி வருகிறது. ஆனால், உக்ரைன் அதனை உறுதியாக மறுத்து வருகிறது. அத்துடன், கிரீமியாவை ரஷியாவிடமிருந்து மீட்கப்போவதாகவும் உக்ரைன் சூளுரைத்துள்ளது.

இந்தச் சூழலில், தங்கள் நாட்டுக்கும், கிரீமியாவுக்கும் இடையிலான கெர்ச் பாலத்தை அந்த தீபகற்பத்தின் மீதான தங்களது உரிமையின் சின்னமாக ரஷியா கருதுகிறது.

ஆனால், அந்தப் பாலம் சட்டவிரோதமானது, அது அழிக்கப்பட வேண்டியது என்று உக்ரைன் கூறி வருகிறது.

கிரீமியாவில் தாக்குதல் நடத்தினால் உக்ரைன் கடும் பின்விளைவுகளைச் சந்திக்கும்; அதற்கான பதிலடித் தாக்குதலில் உக்ரைனின் ராணுவ நடவடிக்கைகளை முடிவு செய்யும் தலைமை மையங்கள் கூட (அதிபர் மாளிகை) தப்பாது என்றும் ரஷியா கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், ரஷியா-கிரீமியா பாலத்தில் 2-ஆவது முறையாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 'போர் முடிந்த பிறகு கூறுகிறோம்'

**கீவ், ஜூலை 17:** கிரீமியா பாலத்தில் திங்கள்கிழமை நடத்தப்பட்ட குண்டு வெடிப்பு தொடர்பான விவரங்களை, இந்தப் போரில் தாங்கள் வெற்றியடைந்ததற்குப் பிறகு வெளியிடவிருப்பதாக உக்ரைன் கூறியுள்ளது.

கிரீமியா உள்ளிட்ட பகுதிகளில் தாங்கள் நடத்தும் தாக்குதல்களுக்கு உக்ரைன் வெளிப்படையாகப் பொறுப்பேற்பதில்லை.

இந்த நிலையில், கெர்ச் பாலத்தில் ஆளில்லா விமானங்கள் மூலம் தாங்கள்தான் தாக்குதல் நடத்தியதாக ரஷியா கூறினாலும், உக்ரைன் அதனை ஏற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ இல்லை.

எனினும், அதனை மறைமுகமாக ஒப்புக்கொள்ளும் வகையில், 'போரில் உக்ரைன் வெற்றியடைந்த பிறகு, கிரீமியா பாலத்தில் நடந்த குண்டுவெடிப்புக்கான ஏற்பாடுகள் எப்படி செய்யப்பட்டன என்ற விவரத்தை வெளியிடுவோம்' என்று உக்ரைன் பாதுகாப்பு சேவை செய்தித் தொடர்பாளர் ஆர்டெம் டெக்டியாரென்கோ கூறினார்.

# ஜிஎஸ்டி பந்தயம் பலிக்காது!

கூடுதலான வரி விதிப்பின் மூலம் மக்களை தவறான பழக்கங்களிலிருந்து காப்பாற்றிவிட அல்லது தடுத்துவிட முடியும் என்று அரசுகள் நினைத்தால் அது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வது என்பதை சொல்லத் தேவையில்லை. உலக நாடுகள் அனைத்திலும் மது அருந்துதல், போதைப் பழக்கம், சூதாட்டம் போன்றவை தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாத சமூகப் பிரச்னைகளாகத் தொடர்கின்றன. எல்லா நாடுகளும் அவற்றை அங்கீகரித்து, ஒழுங்குபடுத்துவது மட்டுமே சாத்தியம் என்கிற முடிவுக்கு வந்திருக்கின்றன.

குஜராத், பிகார் மாநிலங்கள் தவிர, இந்தியாவின் ஏனைய மாநிலங்கள் அனைத்துமே மதுவிலக்கை ரத்து செய்யாவிட்டாலும், இடைக்காலத் தடை என்கிற பெயரில் அரை நூற்றாண்டு காலமாகத் தளர்த்திவிட்டன. உலகெங்கிலும் அமெரிக்கா உள்பட பல நாடுகளில் முனைப்புடன் அறிமுகப்படுத்தப்பட்ட மதுவிலக்கு முயற்சி தோல்வியில்தான் முடிந்திருக்கிறது என்பதும் நிஜம். மதுவிலக்கை அமல்படுத்த முடியாது எனும்போது, அதை முறைப்படுத்த முற்படுகிறோம் என்கிற பெயரில், அதன் மீது அதிக வரி விதித்து வருவாய் ஈட்ட அரசுகள் முற்படுகின்றன.

கடந்த ஜூலை 11-ஆம் தேதி நடந்த 50-ஆவது ஜிஎஸ்டி கௌன்சிலில், இணையவழி விளையாட்டுகள் உள்ளிட்ட சூதாட்டங்கள் போன்றவைக்கு, மதுக் கொள்கை போலவே, வரி விதிப்பின் மூலம் கடிவாளம் போடும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, வரி விதிப்பதன் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இணையவழி விளையாட்டுகள், குதிரைப் பந்தயங்கள், கேசினோ விளையாட்டுகள் ஆகியவற்றிற்கு, பந்தயத் தொகையில் 28% ஜிஎஸ்டி விதிப்பது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

ஒருபுறம் இந்தியாவின் பல மாநிலங்கள் பொதுச் சூதாட்டச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு, தங்கள் அதிகார வரம்பின் கீழ் இணையவழி விளையாட்டுகளைக் கட்டுப்படுத்த முற்பட்டிருக்கின்றன. ஆந்திரம், தெலங்கானா, ஒடிஸா, அஸ்ஸாம் ஆகிய மாநிலங்கள் கற்பனையான விளையாட்டுகளையும், பந்தயம் கட்டும் விளையாட்டுகளையும் தடை செய்துள்ளன. கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு கொண்டுவந்த அனைத்து இணையவழி விளையாட்டுகளுக்கான தடை உயர்நீதிமன்றங்களால் ரத்து செய்யப்பட்டது. தமிழ்நாடு மீண்டும் தடைக்கான சட்டத்தை நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது.

மாநில அரசுகள் இணையவழி விளையாட்டுகளுக்கு (சூதாட்டங்களுக்கு) தடை விதிக்கும் சட்டங்களைக் கொண்டு வந்தாலும் அவை ரத்தாகும் நிலை காணப்படுகிறது. 1957-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, திறமையை உள்ளடக்கிய போட்டிகள் சூதாட்டம் அல்ல. இந்த விளையாட்டுகளில் தொழில் சார்ந்த நடவடிக்கைகள், சட்டப்படியான தொழில்கள், வணிகத்தை மேற்கொள்ளும் அரசமைப்புச் சட்டத்தின் 19 (1) (ஜி) உரிமையின் கீழ் வருகின்றன. சென்னை உயர்நீதிமன்றம், 'ரம்மி' என்பது திறமை சார்ந்த விளையாட்டு, சூதாட்டமல்ல என்று 1968-இல் தீர்ப்பு வழங்கி இருக்கிறது.

இந்தப் பின்னணியில்தான், இணையவழி விளையாட்டுகளைத் தடை செய்வதைவிட, சிகரெட், மதுபானம் போல அதிகபட்ச வரி விதிப்பின் மூலம் அதைக் கட்டுப்படுத்துவது என்கிற முடிவை ஜிஎஸ்டி கௌன்சில் எடுத்திருக்கிறது. அதன் மூலம் மக்கள் மன்றத்தில் சூதாட்டங்களைக் கட்டுப்படுத்துகிறோம் என்கிற தோற்றத்தையும் எதார்த்தத்தில் அரசு கஜானாவுக்கு மிகப் பெரிய வரி வருவாயை பெற்றுத்தரும் 'புத்திசாலித்தன' முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறது.

'கோவா, சிக்கிம் மாநில சுற்றுலாத் துறையில் கேசினோ முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இணையவழி விளையாட்டுகளை ஜிஎஸ்டி சட்ட வரம்புக்குள் கொண்டுவருவதற்கான சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்படும். அனைத்துத் தரப்பினரையும் கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவு இது' என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியிருக்கிறார்.

இணையவழி விளையாட்டுகள், குதிரைப் பந்தயங்கள், கேசினோ விளையாட்டுகள் ஆகியவற்றில் ஈடுபடுவோரின் பந்தயத் தொகையில் 28% ஜிஎஸ்டியாக வசூலிக்கப்படும் என்கிற முடிவால், விளையாட்டுகளில் திறன் சார்ந்தவை, வாய்ப்பு சார்ந்தவை என்கிற வேறுபாடு முற்றிலுமாகக் களையப்படுகிறது. 'கொன்றால் பாவம் தின்றால் போச்சு' என்பதுபோல, மதுவிற்பனை மூலம் வருவாய் ஈட்டும் பாணியில், 28% வரி வதிப்பின் மூலம் சூதாட்டங்கள் அரசின் 'ஞானஸ்நான' அங்கீகாரம் பெறுகின்றன.

புகை பிடிப்பவர்களும், மதுவுக்கு அடிமையானவர்களும் எப்படி விலை குறித்துக் கவலைப்படுவதில்லையோ அதேபோல, சூதாட்டத்தில் ஈடுபடுவோரும் 28% வரி விதிப்பால், அதைத் தவிர்க்கப் போவதில்லை. ஆனால், குறைந்த விலையில் சட்ட விரோதமாக கள்ளச் சாராயம் அருந்துவதுபோல, இணையவழி சூதாட்டக்காரர்களும் மாற்றுவழி தேடுவார்கள்.

28% ஜிஎஸ்டியும், வெற்றி பெற்ற பணத்தில் 30% வருமான வரியும் செலுத்த அவர்கள் தயாராகமாட்டார்கள். வெளிநாடுகளில் இயங்கும் இணையவழி விளையாட்டுகளில் அவர்கள் கலந்து கொள்வதை எப்படி தடுத்துவிட முடியும்? அங்கீகாரமில்லாத இணையவழி விளையாட்டுகள் புற்றீசலாக உருவாகக்கூடும் என்பதை மறந்துவிடக் கூடாது.

அதிகபட்ச 28% வரியைக் குறைந்தபட்ச வரியாக மாற்றுவது; பந்தயத் தொகை மீது அல்லாமல், கமிஷன் தொகையின் மீது வரி விதிப்பது போன்றவை ஒருவேளை அரசுக்கு வருவாய் ஈட்டித் தரக்கூடும். ஏற்கெனவே, குதிரைப் பந்தயங்களில் விளையாடுபவர்கள் சட்டவிரோத, வெளிநாட்டுக் கணக்குகளில் பணம் கட்டி விளையாடி வருகிறார்கள். அதுதான் இணையவழி விளையாட்டுகளுக்கும் நடக்கப்போகிறது.